# February 6, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவுடனான கடைசி அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமான 'நியூ ஸ்டார்ட்' வியாழக்கிழமை காலாவதியானதற்கு ரஷியா தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளது.

(i) அதேநேரம், 'அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும், உலக நாடுகளின் பாதுகாப்பைக் கருதி ரஷியா பொறுப்புடன் செயல்படும்' என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

(ii) இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளும் தலா 1,550 அணு ஆயுதங்களை மட்டுமே வைத்துக் கொள்ள முடியும். இந்நிலையில், ஒப்பந்தத்தின் முடிவு புதிய அணு ஆயுதப் போட்டிக்கும் வழிவகுக்கும் என அச்சம் எழுந்தது.

(iii) இந்த ஒப்பந்தத்தின் முக்கிய விதிகளை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க ரஷிய அதிபர் புதின் முன்மொழிந்திருந்தார். ஆனால், இதற்கு நேரடியாக பதிலளிக்காத அமெரிக்க அதிபர் டிரம்ப், சீனாவுடனும் சேர்த்து முத்தரப்பு ஒப்பந்தத்தையே தான் விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

(iv) இதனிடையே, உக்ரைன் போரின் அமைதிப் பேச்சுவார்த்தையில் முக்கிய முன்னேற்றமாக, ரஷியா-அமெரிக்கா இடையே உயர்நிலை நேரடி ராணுவத் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2. உலக நாடுகளின் பல்வேறு புள்ளிவிவரங்களைத் தொகுத்து வழங்கும் புகழ் பெற்ற 'தி வேர்ல்ட் ஃபேக்ட்புக்' தகவல் வெளியீட்டுச் சேவையை நிறுத்திக்கொள்வதாக அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ அறிவித்துள்ளது.

(i) சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச அளவில் மிகவும் நம்பகமான தகவல் களஞ்சியமாகத் திகழ்ந்த இச்சேவை நிறுத்தப்படுவது, கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ii) கடந்த 1962-ஆம் ஆண்டு, அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகளின் ரகசியப் பயன்பாட்டு ஆவணமாக இது முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. ஒரு நாட்டின் பொருளாதார நிலை, ராணுவ பலம், இயற்கை வளங்கள், சமூகக் கட்டமைப்பு போன்றவை குறித்த மிகத்துல்லியமான தகவல்கள்

இதில் இடம்பெற்றிருந்தன. இதன் முக்கியத்துவம் கருதி, 1970-களில் இது பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. பின்னர், 1997-இல் வலைதளமாக உருவெடுத்த பிறகு, உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மாணவர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு இது ஒரு தவிர்க்க முடியாத தகவல் ஆதாரமாக மாறியது. இந்நிலையில், தற்போது இதன் வெளியீடு முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது.

(iii) இந்தத் திடீர் முடிவுக்கான அதிகாரபூர்வ காரணத்தை சிஐஏ இன்னும் தெரிவிக்கவில்லை. இருப்பினும், முன்னுரிமை மாற்றம், பணியாளர் குறைப்பு, நிதித் தட்டுப்பாடு போன்ற முக்கியக் காரணங்களைத் துறை சார்ந்த நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். உளவு அமைப்பின் முக்கியப் பணிகளுக்குத் தொடர்பில்லாத திட்டங்களைக் கைவிடுமாறு சிஐஏ இயக்குநர் ஜான் ராட்க்ளிஃப் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தார்.

(iv) அதேபோல், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் 2-ஆவது பதவிக் காலத் தொடக்கத்தில், சிஐஏ மற்றும் தேசிய பாதுகாப்பு முகமை ஆகியவற்றில் பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மேலும் நிதித் தட்டுப்பாட்டால், குறைந்த ஆதாரங்களைக் கொண்டு மிக முக்கியமான உளவுப் பணிகளை மட்டும் கவனிக்க வேண்டிய கட்டாயத்துக்கு சிஐஏ தள்ளப்பட்டுள்ளது.

(v) கடைசிப் பதிவு: ஃபேக்ட்புக் வலைதளம் மூடப்படுவதற்கு முன்னதாக, கடந்த ஜனவரி மாதத்தில் உலக நாடுகள் குறித்த தகவல்கள் கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டன.

(vi) ஃபேக்ட்புக் என்பது வெறும் தகவல் தொகுப்பு மட்டுமல்ல; அது உலக நாடுகளைப் புரிந் துகொள்வதற்கான ஒரு பாலமாக இருந்தது' என சமூக ஊடகங்களில் பலரும் தங்களின் வருத்தத்தைப் பதிவு செய்து வருகின்றனர்.

3. ஜியோ-பிபி (பிரிட்டிஷ் பெட்ரோலியம்) நிறுவனத்தின் முயற்சியான 'ஆக்டிவ்' தொழில்நுட்பப் புதிய பெட்ரோல் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

(i) சிறப்பம்சங்கள்:இந்த ஆக்டிவ்' தொழில்நுட்பப் பெட்ரோல் என்ஜினின் முக்கியப் பாகங்களில் சேரும் அழுக்கு மற்றும் கசடுகளை நீக்கி, என்ஜின் நீண்ட காலம் சிறப்பாக உழைக்க வழிவகை செய்கிறது.

(ii) சாதாரண பெட்ரோலைப் பயன்படுத்து வதை விட, இந்தப் பெட்ரோல் மூலம் ஓராண்டுக்கு சுமார் 100 கி.மீ. வரை கூடுதலாகப் பயணிக்க முடியும். மொத்தத்தில், இந்தப் பெட்ரோல் என்ஜினின் பழைய செயல்திறனை மீட்டெடுப்பதுடன், தேய்மானம் ஏற்படாமலும் பாதுகாக்கிறது.

(iii) இத்தனை மேம்பட்ட வசதிகள் கொண்ட இந்தப் பெட்ரோல், வாடிக்கையாளர்களுக்கு எவ்வித கூடுதல் கட்டணமும் இன்றி சாதாரண விலையிலேயே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

4.தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான 60 கிலோ எடைப் பிரிவில் கர்நாடகத்தின் குருராஜா பூஜாரி, ஸ்னாட்ச் பிரிவில் 119 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 150 கிலோ என மொத்தமாக 269 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.

5.மகளிர் டென்னிஸின் உலகக் கோப்பையாக வர்ணிக்கப்படும் பில்லி ஜீன் கிங் கோப்பை போட்டியை நடத்தும் வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது. தில்லியில் ஏப்ரல் 7 முதல் 11-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் இந்தியா, இந்தோனேசியா, தென் கொரியா, மங்கோலியா, நியூஸிலாந்து, தாய்லாந்து மோதுகின்றன.

6.25-ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், இத்தாலியின் மிலன் மற்றும் கோர்டினா டி'ஆம் பெஸோ நகரங்களில் வெள்ளிக்கிழமை (பிப். 6) தொடங்குகின்றன. இதில் இந்தியா உள்பட 92 நாடுகள் பங்கேற்கின்றன.

7. பாரத் டாக்சி' செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்.

(i) ஓலா, உபர், ரேபிடோ ஆகிய நிறுவனங்கள் செயலி மூலம், நாடு முழுவதும் டாக்சி, ஆட்டோ, பைக் சேவையை அளித்து வருகின்றன. இதேபோல், 8 கூட்டுறவு அமைப்புகள் மூலம் கார், ஆட்டோ, பைக் சேவை வழங்குவதற்கு பாரத் டாக்சி செயலி தொடங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 3 லட்சம் ஓட்டுநர்கள் இணைந்துள்ளனர். ஒரு லட்சம் பயனாளர்கள் பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

(ii) ஓட்டுநர்கள் அனைவரும் சாரதி என அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மருத்துவக் காப்பீடு, விபத்துக் காப்பீடு, ஓய்வூதிய சேமிப்பு பலன்கள் உள்ளிட்டவை அளிக்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்களைப் போல, தேவை அதிகமிருக்கையில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஓட்டுநர்களிடம் கமிஷன் தொகையும் பெறப்படுவதில்லை. கிடைக்கும் லாபம் ஓட்டுநர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

(iii) முதல்கட்டமாக இந்தச் செயலி மூலம், தேசிய தலைநகர பிராந்தியம், குஜராத் மாநிலத்தில் டாக்சி, ஆட்டோ, பைக்சேவை அளிக்கப்படுகிறது. பிறகு 3 ஆண்டுகளுக்குள் நாடு முழுவதும் சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சர் அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், 3 ஆண்டுகளில் பாரத் டாக்சி நாடு முழுவதும், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலும், துவாரகா முதல் காமாக்யா வரையிலும் இயங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

8. இந்தியாவும் இலங்கையும் ஆழமான நாகரிக, ஆன்மிக பிணைப்புகளைக் கொண்டுள்ளன என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

(i) குஜராத் மாநிலம், ஆரவல்லி மாவட்டத்தில் உள்ள பௌத்த தொல்லியல் களமான தேவ்னி மோரியில் கண்டெடுக்கப்பட்ட புத்தரின் புனிதச் சின்னங்கள், இலங்கைத் தலைநகர் கொழும்பில் உள்ள புகழ்பெற்ற கங்காராமையா பௌத்த கோயிலில் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) இந்தப் புனிதச் சின்னங்கள், சர்வதேச அளவில் காட்சிப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். குஜராத் ஆளுநர் ஆசார்ய தேவவிரத், துணை முதல்வர் ஹர்ஷ் சங்கவி ஆகியோருடன் இணைந்து, பௌத்த மதத்துறவிகள், இருதரப்பு அதிகாரிகளின் முன்னிலையில் இலங்கை அதிபர் அநுர குமாரதிசாநாயக கண்காட்சியைத் தொடங்கிவைத்தார்.

(iii) முக்கிய தொல்லியல் களம்:

- நாட்டில் உள்ள முக்கியமான பௌத்த மத தொல்லியல் தலங்களில் ஒன்று தேவ்னி மோரி. இங்குமேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் புத்தரின் புனிதச் சாம்பல் கொண்ட பேழைகள், செப்புப் பெட்டி, தங்கம், வெள்ளித் தகடுகள் அடங்கிய சரீர ஸ்தூபம் கண்டறியப்பட்டது. இதில் ஒரு பேழை, பிராமி, சம்ஸ்கிருத எழுத்து வடிவங்கள் பொறிக்கப்பட்டதாகும்.
- குஜராத்தின் வதோதராவில் உள்ள பரோடா மகாராஜா சாயா ஜிராவ் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்படும் இந்தப் புனிதச் சின்னங்கள், இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.
- முன்னதாக, பிரதமர் மோடியின் கடந்த ஆண்டு இலங்கைப் பயணத்தின்போது, அனுராதபுரத் தில் புனித நகர வளாக மேம்பாட்டுத் திட்டத்துக்கான இந்தியாவின் மானிய உதவி அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே, இந்தியா-இலங்கை பௌத்த மத தொடர்புகளை ஊக்குவிக்க கடந்த 2020-இல் 15 மில்லியன் டாலர் (ரூ.135 கோடி) அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(v) வர்த்தகப் பற்றாக்குறை எவ்வளவு?

- கடந்த நிதியாண்டை பொருத்தவரை, இந்தியாவின் மூன்றாவது பெரிய வர்த்தக நாடு ஐக்கிய அரபு அமீரகம். இந்த நாட்டுக்கான இந்திய ஏற்றுமதி மதிப்பு 36.63 பில்லியன் டாலர். இறக்குமதி 63.40 பில்லியன் டாலர் வர்த்தகப் பற்றாக்குறை 26.76 பில்லியன் டாலராக உள்ளது.
- இந்தியாவின் 5-ஆவது பெரிய வர்த்தக நாடான சவூதி அரேபியாவுக்கு 11.75 பில்லியன் டாலர் அளவில் இந்தியா ஏற்றுமதி மேற்கொண்டுள்ளது. இறக்குமதி மதிப்பு 30.12 பில்லியன் டாலர் என்ற நிலையில், வர்த்தகப் பற்றாக்குறை 18.36 பில்லியன் டாலராக உள்ளது. இந்தியாவின் 22-ஆவது வர்த்தக நாடாக உள்ள கத்தாரிடம் இருந்து முக்கியமாக திரவமாக் கப்பட்ட இயற்கை எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது. அதேநேரம், தானியங்கள், மீன், ரசாயனங்கள், பிளாஸ்டிக் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நாட்டுடன் இந்தியாவுக்கு உள்ள வர்த்தகப் பற்றாக்குறை 10.78 பில்லியன் டாலர்.
- ஓமனுடன் 2.48 பில்லியன் டாலரும், குவைத் துடன் 6.35 பில்லியன் டாலரும், பஹ்ரைனுடன் 45.97 மில்லியன் டாலரும் வர்த்தகப் பற்றாக்குறை நிலவுகிறது.

10. உரை-பேச்சு, தானியங்கி பேச்சு அங்கீகாரம் என இந்திய மொழிகளுக்கான ஏஐ மாதிரிகளை உருவாக்க 2024, அக்டோபர் மாதம் பாரத்ஜென் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது.

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பாரத்ஜென் பன்மொழி செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மாதிரியில் 22 அலுவல் மொழிகளிலும் உரை சார்ந்த சேவைகள் விரைவில் நிறைவடையவுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

11. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாட்டை நடத்தவுள்ள இந்தியாவுக்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் பாராட்டு தெரிவித்தார்.

(i) தில்லியில் பிப்.19,20 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள 'ஏஐ தாக்கம்' தொடர்பான உச்சி மாநாட்டில்

அன்டோனியா குட்டெரெஸ் பங்கேற்கவுள்ள நிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

(ii) கடந்த 2024-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய எண்ம ஒப்பந்தத்தின் முடிவுகள் அடிப்படையில் வளர்ந்துவரும் நாடுகளில் ஏஐ உள்கட்டமைப்பு மற்றும் பிற தொழில்நுட்பங்களை மேலும் மேம்படுத்துவது, ஏஐ தாக்கத்தை அறிவியல்பூர்வமாக புரிந்து கொள்ள தன்னிச்சையான சர்வதேச அறிவியல் குழு ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்க வேண்டும் என்பதே உலக நாடுகளுக்கு எனது பரிந்துரை.

(iii) ஏஐ தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் முதல் சர்வதேச அறிவியல் குழுவில் வத்வானி அறிவியல் தரவு மற்றும் சென்னை ஐஐடி-யின் பொறுப்பு ஏஐ மையத் தலைவர் பலராம் ரவிச்சந்திரனை நியமிக்க அன்டோனியோ குட்டெரெஸ் பரிந்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.